# முதல்வர் மு.க.ஸ்டாலின் பிரதமருக்கு கடிதம் !

## முதல் பக்கத் தொடர்ச்சி

மூன்று குழுக்கள் 25.10.2025 முதல் 28.10.2025 வரை தமிழ்நாட்டில் களப் பயணம் மேற்கொண்டு விவசாயிகளிடமிருந்து நெல் மாதிரிகளை சேகரித்தன. ஆனால் தளர்வு தொடர்பான உத்தரவுகள் இன்றளவும் கிடைக்கவில்லை.

கரீஃப் (குறுவை) பருவ கொள்முதல் இன்றளவும் நடந்து கொண்டிருக்கும் நிலையில், 16.11.2025 முதல் வடகிழக்கு பருவமழை மீண்டும் தீவிரமடையும் என வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. இது கொள்முதல் செய்யப்படும் நெல்லில் மீண்டும் பாதிப்பை ஏற்படுத்தும். எனவே, விவசாயிகளுக்கு நன்மை கிடைக்கும் வகையில் ஈரப்பத அளவு தளர்வு உத்தரவினை விரைவாக வழங்கிட வேண்டும் என்று முதலமைச்சர் அவர்கள், இந்தியப் பிரதமர் அவர்களிடம் இக்கடிதம் மூலம் கேட்டுக்கொண்டுள்ளார்.

**செறிவூட்டப்பட்ட அரிசி மாதிரிகள் எடுப்பதில் தளர்வு ஆணைகள் கோரி!**

மாநில அரசு, 07.10.2025 அன்று 5 ஒப்பந்ததாரர்களுக்கு செறிவூட்டப்பட்ட அரிசியை விநியோகிக்க உத்தரவு வழங்கியது என்றும், 16.11.2025 நிலவரப்படி ஒப்பந்ததாரர்கள் 1,760 மெட்ரிக் டன் உற்பத்தி செய்து, FoRTrace இணையதளத்தில் 123 மாதிரிகளைப் பதிவேற்றியுள்ளனர் என்றும், இதில் பதிவேற்றப்பட்ட 77 மாதிரிகளில், இதுவரை 33 மாதிரிகளுக்கு மட்டுமே முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன என்றும், ஒரு மாதிரி முடிவை அறிவிக்க கிட்டத்தட்ட 12 நாட்கள் ஆகின்றன என்பதை குறிப்பிட்டு, இந்த முறை காலதாமதத்தை ஏற்படுத்துவதாக குறிப்பிட்டுள்ளார்.

தற்போது வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ள நிலையில், கொள்முதல் செய்யப்பட்ட நெல்லை அரவை செய்து பெறப்படும் கண்டுமுதல் அரிசியை நகர்வு செய்திடவும், அதனைத் தொடர்ந்து வரவிருக்கும் சம்பா (ரபி) பருவ நெல் கொள்முதலுக்குத் தேவையான இடத்தினை ஏற்படுத்திடவும் அதிக அளவு செறிவூட்டப்பட்ட அரிசி அரவைக்குத் தேவைப்படுகின்றன.

எனவே, தற்போதுள்ள 25 கிலோ FRK சிப்பமிடும் அளவை 50 கிலோவாக அதிகரிக்க வேண்டும் என்றும், மாதிரி தொகுதி அளவை 10 MTஇலிருந்து 25 MT ஆக BIS தரநிலைகளுக்கு (ஒரு தொகுதிக்கு 500 மூட்டைகள்) ஏற்ப அதிகரிக்க வேண்டும் என்றும், மேற்கண்ட நடவடிக்கைகளின் மூலம் எடுக்கப்பட வேண்டிய மாதிரிகளின் எண்ணிக்கை குறைந்து, இடப்பற்றாக்குறை நீங்கி, முடிவுகளை அறிவிக்கும் காலம் 12 நாட்களிலிருந்து 7 நாட்களாகக் குறையும் என்று குறிப்பிட்டுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இது தொடர்ச்சியான நெல் அரவைக்கு வழிவகுக்கும் என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். மேலும், செறிவூட்டப்பட்ட அரிசி மணிகளின் மாதிரி எடுக்கும் அதிகாரத்தை தென்னிந்திய மாநிலங்களில் உள்ள இந்திய உணவுக் கழக அதிகாரிகளுக்கு வழங்கி, தென்னிந்திய மாநிலங்களில் உள்ள ஆய்வகங்களில் சோதனை நடத்த அனுமதிக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளார்.

இப்பரிந்துரைகளை பரிசீலனை செய்து நெல் அரவை ஆலைகளுக்கு செறிவூட்டப்பட்ட அரிசி மணிகள் விநியோகத்தினை எளிதாக்கத் தேவையான உத்தரவுகளை பிறப்பித்திட வேண்டுமென்றும், இதன்மூலம் சோதனை முடிவுகளைப் பெறுவதற்கான காலம் கணிசமாகக் குறையும் என்றும், தமிழ்நாடு விவசாயிகளின் நலன் கருதி இவ்விவகாரத்தில் விரைவில் நல்ல முடிவுகளை எடுத்திட, முதலமைச்சர் அவர்கள், இந்தியப் பிரதமர் அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளார்.



கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பரனார் அவர்களின் 89வது நினைவு நாளான தியாகத் திருநாளையொட்டி, தமிழ்நாடு அரசின் சார்பில் நேற்று முன்தினம் (18.11.2025) சென்னை, கிண்டி, காந்தி மண்டப வளாகத்தில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப் படத்திற்கு குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் ஏ.எம்.வி.பிரபாகர ராஜா, ஜே. எம். அசன் மௌலானா, துணை மேயர் மு.மகேஷ்குமார், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா.வைத்திநாதன் மற்றும் துறை உயர் அலுவலர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

# மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. பேட்டி !

## முதல் பக்கத் தொடர்ச்சி

என்ற கோரிக்கையை வலியுறுத்தி, தி.மு.க.வின் அமைப்புச் செயலாளர்கள் மற்றும் மாவட்டச் செயலாளர்கள் தேர்தல் ஆணையத்திற்கு முறைப்படி நூற்றுக்கும் மேலான கடிதங்களை எழுதியிருக்கிறார்கள். ஜனநாயகம் காப்பாற்றப்பட வேண்டும், தகுதியற்ற யாரும் வாக்காளராகக் கூடாது, தகுதியுள்ள யாரும் நீக்கப்படக் கூடாது, இறந்தவர்கள், இரட்டைப் பதிவு உள்ளவர்கள், குடிமாறியவர்களின் பெயர்கள் நீக்கப்பட வேண்டும் என்ற ஒத்த கருத்தை திமுக 2004 ஆம் ஆண்டிலிருந்து வலியுறுத்தி வருகிறது.

சென்னை மாவட்டத் தேர்தல் அதிகாரியும் சரி, மாவட்டத் தேர்தல் அதிகாரிகள் அனைவருமே அமைச்சர்களுடைய கட்டுப்பாட்டில்தான் இருக்கிறார்கள், அவர்கள் என்ன சொல்கிறார்களோ அதன்படி தான் நடக்கிறார்கள், என்ற அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் ஜெயக்குமாரின் விமர்சனத்துக்கு, அது அவர்களுடைய இயலாமையின் வெளிப்பாடு என்று பதிலளித்தார்.

மேலும், ஜெயக்குமார் உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்த போது, தேர்தல் ஆணையத்துடன் எந்த அரசியல் கட்சியும் கூட சேரக்கூடாது என்று கோரிக்கை விடுத்துள்ளார். அரசியல் கட்சிகள்தான் மக்களுடைய பிரதிநிதிகள் என்றும், அவர்கள் தேர்தலில் ஒரு பெரிய பங்குதாரர்கள் என்றும் சுட்டிக்காட்டிய இளங்கோ, அரசியல் கட்சிகளே இதில் பங்கெடுத்துக் கொள்ளக் கூடாது என்று அவர் சொல்வது ஜனநாயகத்திற்கு விரோதமான செயல் என்று விமர்சித்தார்.

**தி.மு.க. தாக்கல் செய்த வழக்குகள்!**

தேர்தல் ஆணையம் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளாத போது, தி.மு.க. நீதிமன்றத்தில் தயங்காமல் பல வழக்குகளைத் தாக்கல் செய்திருக்கிறது. முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி தாக்கல் செய்த வழக்கு [WP. 19080/2020] இன்றும் நிலுவையில் உள்ளது. சிற்றரசு தாக்கல் செய்த வழக்கு [WP 20426/ 2020]. கழக முதன்மை செயலாளர் கே.என். நேரு தாக்கல் செய்த வழக்கு [WP 3199/2021], அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி தாக்கல் செய்த வழக்கு [WP 4342/2021] மற்றும் பிற வழக்குகள் [WP 7990/2021, WP 8085/ 2021, WP 9578/2021] என்று பல வழக்குகளைத் தி.மு.க. தாக்கல் செய்திருக்கிறது.

**வாக்குகள் நீக்கப்படலாம் என்ற அச்சம் இருக்கிறது!**

இந்த மனுக்கள், ஈ.வி.எம். இயந்திரம் தொடங்கி வாக்காளர் பட்டியலில் உள்ள குறைகள் வரை, ஒரு தேர்தலை ஜனநாயகமாக நடத்துவது குறித்து மக்கள் பக்கம் நின்று குரல் எழுப்பக்கூடிய கட்சியாக தி.மு.க. மட்டுமே இருப்பதாகக் காட்டுகிறது.

தற்போது முறையற்ற வகையில் செய்யக்கூடிய இந்த எஸ்.ஐ.ஆர்.ஐ. தான் தி.மு.க. எதிர்க்கிறது. இது களத்தில் பிராக்டிக்கலாக செய்ய வேண்டிய ஒரு வேலை, ஆனால் தேர்தல் ஆணையம் போதுமான தயாரிப்பு வேலைகளைச் செய்யத் தவறிவிட்டது. தேர்தல் ஆணையம், ஒரு மாத காலத்துக்குள் பொதுமக்கள் கணக்கீட்டுப் படிவத்தைப் பூர்த்தி செய்து தர வேண்டும் என்கிறது. முழுக்க முழுக்க பி.எல்.ஓ.க்களை நம்பி செயல்படும் இந்த முறையில், அவர்களுக்கு ஒரு நாள் மட்டுமே பயிற்சி அளிக்கப்பட்டது. பி.எல்.ஓ.க்கள், மக்களிடம் உள்ள எதிர்ப்பையும், தேர்தல் ஆணையத்தின் அழுத்தத்தையும் எதிர்கொள்ள வேண்டி இருக்கிறது. படிவங்கள் முழுமையாக விநியோகிக்கப்படவில்லை; இரண்டு படிவங்கள் வர வேண்டிய இடங்களில் ஒரு படிவம் மட்டுமே வந்திருக்கிறது. இந்த நடவடிக்கையால், பல லட்சக்கணக்கான வாக்குகள் நீக்கப்படலாம் என்ற அச்சம் இருக்கிறது, இது தமிழ்நாட்டின் ஜனநாயகத்திற்குப் பேராபத்து.

**அசாமிற்கு மட்டும் அப்படி என்ன வித்தியாசம்?**

அசாமில் எஸ்.ஐ.ஆர். கொண்டு வந்தபோது, தேர்தல் ஆணைய அலுவலர்களே எல்லா கணக்கீட்டுப் படிவங்களையும் பூர்த்தி செய்து கொள்வார்கள் என்றும், வாக்காளர்கள் படிவத்தைப் பூர்த்தி செய்ய வேண்டாம் என்றும் கூறியுள்ளனர். தமிழ்நாட்டுக்கும் அசாமுக்கும் அப்படி என்ன பெரிய வித்தியாசம்? 12 மாநிலங்களுக்கும் அசாமுக்கும் ஏன் இந்த வித்தியாசம் காட்டுகிறீர்கள் என்று இளங்கோ கேள்வி எழுப்பினார்.

இந்திய குடிமகனாக இருக்க வேண்டும், 18 வயது நிரம்பியவராக இருக்க வேண்டும், அந்தத் தொகுதியில் சாதாரணமாக வசிக்கக் கூடியவராக இருக்க வேண்டும் என்ற அடிப்படைத் தகுதிகள் இருக்க வேண்டும். தேர்தல் ஆணையம் முதலில் 11 அடையாள ஆவணங்களைச் சொன்னது. உச்ச நீதிமன்றம் சொன்னதால் ஆதார் சேர்க்கப்பட்டது. ஆனால், 13வது ஆவணமாக, பீகார் எஸ்.ஐ.ஆர். இல், ஜூலை மாதம் 2025ல் வெளியிடப்பட்ட பட்டியலில் உங்கள் பெயர் இருந்தால், அதை அடையாள ஆவணமாகக் காட்டலாம் என்று சொல்கிறது. இது சட்டத்திற்கு எதிரானது.

**தேர்தல் ஆணையர் தேர்வு! அரசியல் சட்டம் திருத்தம்!**

உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி உறுப்பினராக இருந்து தேர்தல் ஆணையாளர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றம் கூறியதை, ஒன்றிய பா.ஜ.க. அரசு அரசியல் சட்ட திருத்தத்தைக் கொண்டு வந்து மாற்றியது. இந்தச் சட்டத்தில், பிரதமர் மற்றும் ஒன்றிய அமைச்சர் ஒருவர் மட்டுமே நியமனத்தில் இருப்பார்கள் என்ற முறையைக் கொண்டு வந்தனர். 01.12.2023 அன்று மாநிலங்களவையில் நடந்த விவாதத்தில், அ.தி.மு.க. உறுப்பினர் இந்தச் சட்டத்தை எதிர்த்துப் பேசவில்லை. இது ஜனநாயகத்துக்கு விரோதமானது என்று சொல்லவில்லை. இந்தச் சட்டத்தின் விளைவாக, பா.ஜ.க. தேர்ந்தெடுப்பவர்கள் தேர்தல் ஆணையாளராக நியமிக்கப்படுகிறார்கள். அப்படி நியமிக்கப்பட்ட தேர்தல் ஆணையம் இன்று மக்களின் வாக்குரிமையைப் பறிக்கும் வகையில் இந்த எஸ்.ஐ.ஆர்.ஐ. நடத்துவதாக இளங்கோ குற்றம் சாட்டினார்.

தி.மு. கழகம் எப்போதும் ஒரு முழுமையான, நேர்மையான வாக்காளர் பட்டியல் வேண்டும் என்று வலியுறுத்துவதாகவும், 2026 ல் முறையற்ற முறையில் வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட்டால், நிச்சயமாக உச்ச நீதிமன்றத்தை நாடி எந்தவொரு தனி மனிதரின் வாக்கும் பறி போகாமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு என்.ஆர்.இளங்கோ பேட்டியளித்தார்.

### வேளாண் பொருட்களுக்கான 100 மதிப்பு கூட்டு மையங்கள் அமைத்திட

# அதிக பட்சமாக ரூ.1 கோடியே 50 லட்சம் வரை மானியம்!

## தொழில் முனைவோருக்கு ஒரு வாய்ப்பு! அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!

சென்னை, நவ. 20 -

வேளாண் விளை பொருட்களுக்கான 100 மதிப்பு கூட்டும் மையங்கள் அமைத்திட தொழில் முனைவோர்கள் மற்றும் நிறுவனங்களுக்கு ஒரு வாய்ப்பு அதிகபட்சமாக ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாய் வரை மானியம் என வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவித்துள்ளார்.

இது குறித்த அரசின் செய்தி வெளியீடு வருமாறு:-

முதலமைச்சர் அவர்கள், ”2030 ஆம் ஆண்டிற்குள் தமிழ்நாட்டினை ஒரு ட்ரில்லியன் டாலர் பொருளாதாரம் கொண்ட மாநிலமாக மாற்றவேண்டும்” என்று அறிவித்துள்ளார்கள். இதில் வேளாண் விளைபொருட்களின் பதப்படுத்துதல் மற்றும் மதிப்புக்கூட்டுதல் இன்றியமையாததாகும். இந்நிலையில், 202526ஆம் ஆண்டிற்கான வேளாண்மை நிதி நிலை அறிக்கையில் வேளாண் விவசாயிகளின் நலனை கருத்தில் கொண்டு அவர்கள் பயன்பெறும் பொருட்டு வேளாண் விளைபொருட்களின் மதிப்புக்கூட்டுதல் மற்றும் பதப்படுத்தும் தொழில் துவங்கும் தொழில் முனைவோர்கள் மற்றும் நிறுவனங்களை ஊக்கப்படுத்த சிறப்புத் திட்டம் ஒன்று செயல்படுத்தப்படும் என்ற அறிவிப்பினைச் செயல்படுத்திட ஏற்கனவே அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில், ரூபாய் 10 கோடி வரையிலான மதிப்புக்கூட்டுதல் திட்டங்களுக்கு பொது பிரிவினருக்கு முதலீட்டு மானியமாக 25 சதவீதமும், பெண்கள். தொழில் வளர்ச்சியில் பின்தங்கியுள்ள வட்டாரங்களில் தொடங்கப்படும் தொழில்கள், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்குக் கூடுதலாக 10 சதவீதம் ஆக மொத்தம் 35 சதவீதம் என அதிகபட்சமாக ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாய் வரை மானியம் வழங்கப்படும். இது தவிர அனைத்துப் பிரிவினருக்கும் 5 சதவீத வட்டி மானியம் 5 ஆண்டுகளுக்கு வழங்கப்படும்.

இத்திட்டம் தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தில், தேர்ந்தெடுக்கப்படும் தொழில்கள் வேளாண்மை, தோட்டக்கலை விளைபொருட்களின் இரண்டாம் நிலை அல்லது மூன்றாம் நிலை பதப்படுத்தும் திட்டங்களாக இருக்கவேண்டும். திட்ட மதிப்பீட்டில் பயனாளிகளின் பங்களிப்பு குறைந்தபட்சம் 5 சதவீதமாக இருக்க வேண்டும் மற்றும் மீதமுள்ள தொகை வங்கிக் கடனாகப் பெற வேண்டும்.

இத்திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்தும் வகையில் வேளாண் மற்றும் தோட்டக்கலை பயிர்களில் நவீன மற்றும் புதுமையான மதிப்பு கூட்டும் திட்டங்கள், ஏற்றுமதித் திறன் கொண்ட விளை பொருட்கள், விரைவில் வீணாகக் கூடிய காய்கறிகள், பழங்கள், பூக்கள் போன்ற தோட்டக்கலைப் பயிர்களில் மதிப்பு கூட்டுதல், மாவட்டத்திற்கே உரிய தனித்துவமான வேளாண் விளைபொருட்களின் மதிப்பு கூட்டுதல் ஆகியவற்றில் ஆர்வமுடைய தொழில் முனைவோர்களை மாவட்டங்கள் தோறும் தேர்வு செய்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தில் பயன்பெற ஆர்வமுள்ள வேளாண் தொழில்முனைவோர்கள் விரிவான திட்ட அறிக்கை தயாரித்து (Detailed Project Report), வங்கியில் கடன் ஒப்புதல் பெற்றபின், மானியம் பெறுவதற்கான அவர்களுடைய விண்ணப்பங்கள் மாவட்ட தொழில்நுட்பக்குழு மற்றும் மாநில அளவிலான திட்ட ஒப்புதல் குழுவால் மதிப்பாய்வு செய்யப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட தொழில்முனைவோருக்கு அவர்களின் தொழில் திட்டத்திற்கேற்ப மானியத் தொகை அதிகபட்சமாக ஒரு கோடியே 50 இலட்சம் ரூபாய் வரை ஒரே தவணையாக வழங்கப்படும். மேலும் 5 ஆண்டுகளுக்கு 5 சதவீதம் வட்டி மானியம் வழங்கப்படுவதுடன் கூடுதலாக வேளாண் கட்டமைப்பு நிதி திட்டத்தில் (Agricutlure Infrastructure Fund) 3 சதவீத வட்டி மானியமும் பெறலாம்.

ஏற்கனவே ஒன்றிய மற்றும் மாநில அரசு திட்டங்களின் கீழ் வேளாண் விளைபொருட்கள் மதிப்புக் கூட்டுதல் மற்றும் பதப்படுத்தும் தொழில்களுக்கு நிதி உதவி பெற்ற பயனாளிகளும் இத்திட்டத்தில் பயன்பெறலாம். இவர்களுக்கு அதிகபட்ச மானியத் தொகையிலிருந்து ஏற்கனவே வேறு ஏதாவது திட்டத்தில் பெற்றுவரும் மானியத்தொகை போக மீதத் தொகை மானியமாக வழங்கப்படும்.

இதுவரை சுமார் 305 கோடி ரூபாய் திட்ட மதிப்பீட்டில் மூலிகைப்பயிர்களில் மதிப்புக்கூட்டுதல், மாம்பழக் கூழ் மற்றும் உறை நிலை மதிப்புக்கூட்டுதல் (Individual Quick Freezing), பலா விதைப் பவுடர், முந்திரி மதிப்பு கூட்டு பொருட்கள், நெல்லிச் சாறு, நெல்லிப் பவுடர், கற்றாழையிலி ருந்து அழகு சாதனப் பொருட்கள், தேங்காய் விர்ஜின் ஆயில், முருங்கை இலை கேப்சூல், பிஸ்கட், சிறுதானியங்களில் பாஸ்தா, நூடுல்ஸ், அவல், பிஸ்கட், காளான் ஊறுகாய், பப்பாளி கூழ், ஜாம், சின்ன வெங்காயம் பதப்படுத்தல் போன்ற பல்வேறு மதிப்புக்கூட்டும் பொருட்கள் தயாரிக்கும் தொழில் தொடங்கிட 50 பெண் தொழில்முனைவோர்கள் உள்ளிட்ட 130 பயனாளிகள் பதிவு செய்துள்ளனர்.

எனவே, வேளாண் விளைபொருட்களை மதிப்புக்கூட்டுதல், பதப்படுத்துதல் போன்ற பல்வேறு தொழில்நுட்பங்களை செயல்படுத்தி தரமான உற்பத்திப்பொருட்களை உள்நாட்டு, வெளிநாட்டு சந்தைகளில் விற்பனை செய்து பொருளாதார ஏற்றம்பெற ஆர்வமுள்ள அனைத்து தொழில் முனைவோர்களும் தமிழ்நாடு அரசின் மானிய உதவியுடன் செயல்படுத்தப்படும் இத்திட்டத்தினை பயன்படுத்திக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஒழுங்கு நடவடிக்கை

## தலைமைக் கழக அறிவிப்பு

கடலூர் மேற்கு மாவட்டம், கம்மாபுரம் கிழக்கு ஒன்றியம், இருப்பு ஊராட்சியைச் சேர்ந்த என்.ஆர்.தேவேந்திரன் அவர்கள் கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (suspension) வைக்கப்படுகிறார்.

**“அண்ணா அறிவாலயம்”** **துரைமுருகன்**
சென்னை- 600 018. பொதுச்செயலாளர்,
நாள்: 18.11.2025. தி.மு.க.

## கோவை தெற்கு மாவட்டம்

# தொண்டாமுத்தூர் கிழக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

கோவை தெற்கு மாவட்டம், தொண்டாமுத்தூர் கிழக்கு ஒன்றியச் செயலாளர் நாராயணசாமி அவர்களுக்குப் பதிலாக **செ.கணேசன்** (2/119, சரவணா நகர், மாதம்பட்டி அஞ்சல், கோவை - 641 010) அவர்கள் தொண்டாமுத்தூர் கிழக்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**“அண்ணா அறிவாலயம்”** **துரைமுருகன்**
சென்னை- 600 018. பொதுச்செயலாளர்,
நாள்: 18.11.2025. தி.மு.க.

# ஒழுங்கு நடவடிக்கை

## தலைமைக் கழக அறிவிப்பு

சேலம் மேற்கு மாவட்டம், நங்கவள்ளி வடக்கு ஒன்றியம், பி.என்.பட்டி பேரூரைச் சேர்ந்த பி.எஸ்.ராமசாமி அவர்கள் கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும் தற்காலிகமாக நீக்கி (suspension) வைக்கப்படுகிறார்.

**“அண்ணா அறிவாலயம்”** **துரைமுருகன்**
சென்னை- 600 018. பொதுச்செயலாளர்,
நாள்: 18.11.2025. தி.மு.க.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## திருச்சி எஸ்.ஏ.ஜி. ராபி

## நவம்பர் 20 (2004)



திருச்சி நகரக் கழகச் செயலாளராக இரண்டு முறை பணியாற்றியவர்.

செயற்குழு, பொதுக்குழு உறுப்பினராகவும் இருந்துள்ளார்.

பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரின் நெருங்கிய நண்பர்.

கழகம் நடத்திய அறப்போராட்டங்கள் அனைத்திலும் கலந்து கொண்டவர்.

மிசா கைதியாக ஓராண்டு காலம் சிறையில் இருந்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.